1986 மே 10]

திரு. சு. பாலன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தொழிலாளர்களுக்கு அயினாவரத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை இருக்கிறது. இப்படிப்பட்ட டயலைசரை ஒரு டீடம் அமைத்து தொழிலாளர்கள் நன்மை பெறுவதற்கு, அமைச்சர் அவர்கள் உடனடியாக வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நல்ல யோசனை. அது கவனிக்கப்படும்.

தாரமங்கலத்தில் விசைத்தறிக் கூடம்

731—(*வினா எண். 7515)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் விசைத்தறிக் கூடம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்குத் தான் விசைத் தறிகளை ஒதுக்க வேண்டும், தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையை மத்திய அரசு இதற்கு முன்னாலே வைத்திருந்தது. புதிய ஜவுளிக் கொள்கையை அறிவித்த பிறகு அந்தக் கொள்கையிலே என்ன மாற்றங்களைச் செய்திருக்கிறது என்ற அந்த விவரத்தையும், அது குறித்து நம்முடைய அரசாங்கம் என்ன கொள்கைகளை வலியுறுத்தி வருகிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிய ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்படுவதற்கு முன்பு விசைத் தறிகளைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரலாம் என்ற நிபந்தனையின் கீழ் மத்திய அரசு 700 விசைத் தறிகளுக்கு தமிழ்நாட்டிற்கு அனுமதி கொடுத்தது 14 இடங்களில் அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய ஜவுளிக் கொள்கை பிரகாரம் விசைத்தறிகளை தனியார்களே நிச்சயமாக எவ்வளவு வேண்டுமானாலும் துவக்கலாம் என்று

சொல்லியிருப்பதால் அதற்கு ஏதும் தடை இப்போது இல்லை. தமிழக அரசு மேலும் விசைத் தறியை விஸ்தரிக்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அனுமதி பெற்று தனியார்கள் விசைத் தறிகளை வைத்துக் கொள்ளலாம் என்று இப்போது புதிய ஜவுளிக் கொள்கை அடிப்படையிலே கொள்கை உருவாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதற்கு ஏதாவது சீலிங் உண்டா ? ஆண்டுக்கு இவ்வளவு ஒதுக்க வேண்டும் என்று அளவுகோல் (டார்கெட்) உண்டா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அதிகார பூர்வமாக சுமார் 1 இலட்சம் விசைத் தறிகளும், அதிகார பூர்வமில்லாத விசைத் தறிகள் 1 இலட்சமும் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதனால் இந்த விசைத் தறியையும் மாற்றி சாதாரண சிறு தொழில் போல், ஸ்மால் இண்டஸ்ட்ரி போல் கருதி மாநில அரசு இந்த விசைத் தறிகளை பதிவு செய்யவும், அதை கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறது.

திருவிடைமருதூரில் நூற்பாலை.

732 (*வினா எண். 8353)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் ஒரு நூற்பாலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

பரிசுச் சீட்டிற்கு விற்பனை வரி.

733 (*வினா எண். 6205)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரிசுச் சீட்டுகளுக்குப் போடப்பட்ட வரி மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?